**மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர், கீழ்ப்பாக்கம், சென்னை –10 அவர்களின்**

**செயல்முறை ஆணை**

**முன்னிலை: மரு.இரா.சாந்திமலர், எம்.டி., டி.ஏ.,**

**ந.க.எண்:41020/நி2/4/2023** **நாள்: 12.09.2023**

பொருள் : நிருவாகம் – தமிழ்நாடு அமைச்சுப்பணிகள் – கருணை அடிப்படையில் பணி நியமனம் – திரு.ர.அருண் தா/பெ.(அமரர்) திருமதி.ச.சந்தான செல்வம், இளநிலை உதவியாளர், நோய் தடுப்பு கிங் மருந்து மற்றும் ஆராய்ச்சி நிலையம், கிண்டி, சென்னை – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணிநியமனம் – பணிவரன்முறை ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :
1. அரசாணை (நிலை)எண்:18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்:23.01.2020 மற்றும் அதன் தொடர்புடைய ஆணைகள்.
2. அரசாணை (நிலை)எண்:48, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்:26.02.2020.
3. அரசு கடித எண்:8755/ஏடி2/2020–1, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்(ஏடி2)துறை, நாள்:16.03.2021.
4. இவ்வியக்கக பணி ஒதுக்கீட்டு ஆணை ந.க.எண்:64345/நி2/4/2021–119, நாள்:08.09.2021.
5. இயக்குநர், நோய் தடுப்பு கிங் மருந்து மற்றும் ஆராய்ச்சி நிலையம், கிண்டி, சென்னை அவர்களின் பணி நியமன செயல்முறை ஆணை எண்:05356/நி2/2021, நாள்:05.10.2021.
6. இயக்குநர் (மு.கூ.பொ.), நோய் தடுப்பு கிங் மருந்து மற்றும் ஆராய்ச்சி நிலையம், கிண்டி, சென்னை அவர்களின் கடித ந.க.எண்:05356/நி2/2021, நாள்:25.04.2023.
7. அரசு கடித எண்:3736941/ஏடி2/2023–1, மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத் (ஏடி2)துறை, நாள்:18.01/2023.

*****

**ஆணை:**

செங்கல்பட்டு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் செவிலியராகப் (*Staff* Nurse) பணிபுரிந்து கொண்டிருந்த திருமதி.ச.சந்தான செல்வம் அவர்கள் 07.09.2011 அன்று பணியிடை இறந்துள்ளார். அவரின் பிறந்த தேதி 08.04.1960 ஆகும். அவரின் உத்தேச ஓய்வு பெறும் நாள் 30.04.2018 ஆகும். இவர் தாம் வகித்து வந்த செவிலியர் பணியிடத்தில் தகுதிகாண் பருவம் முடித்தவர் ஆவார். மேற்படி அரசு ஊழியர் இறந்ததைத் தொடர்ந்து, அவரின் மகனும், வாரிசுதாரருமான திரு.ர.அருண் என்பவர் தனது 01.02.2012–ஆம் நாளிட்ட கடிதத்தில், தனக்கு கருணை அடிப்படையில் பணி கோரி உரிய காலக்கெடுவுக்குள் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்துள்ளார்.

..2...

Scanned with OKEN Scanner